Registered as a News Paper

பக்கங்கள் 4

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆடி 03 | [18-07-1998] | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 150

## யாழ். தபால்கள் உடைக்கப்படாது பிரிகேடியர் அங்கமன உறுதி

வடபகுதிக்கு அனுப்பப்படும் வெளிநாட்டுக் கடிதங்கள் கடற்படையினரால் பிரித்துப் பார்த்து சோதிக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக பிரிகேடியர் அங்கமன தபால்மா அதிபருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார். இனிமேல் வடபகுதிக்கென தபாலில் இடப்படும் கடிதங்கள் கடற்படையினரின் சோதனைக்கு உள்ளாகாமலே பருத்தித்துறைக்குச் செல்லும் ஒவ்வொரு கப்பலிலும் அனுப்பப்படும் என தபால்மா அதிபர் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் இதன்படி இதுவரை சோதிக்கப்பட்ட கடிதங்களும் சோதனைக்காக காத்திருந்த கடிதங்களும் அடங்கிய 800 தபால் பொதிகள் கடந்த வியாழனன்று புறப்பட்ட கப்பலில் அனுப்பப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த (வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி) சட்டத்தரணிகளையும், சட்ட அறிஞர்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவதற்காக இன்று காலை 10.00 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே குறிப்பிட்ட பிரிவுகளைச் சேர்ந்த அனைத்து சட்டத்தரணிகளையும், சட்ட

[4ஆம் பக்கம் பார்க்க]

# இரு நாடுகள்; இரு ராணுவங்கள்!

# இலங்கைத் தீவின் இன்றைய நிலை!

## அல்லிப்பளை கரை மீது அகோர பீரங்கி தாக்கு!

### ஒருவர் காயம், படகுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

கிளாலி அல்லிப்பளை கரையோரம் மீது சிறிலங்கா கடற்படைக்குச்சொந்தமான ஐந்து பீரங்கிப் படகுகள் நேற்று மாலை அகோர பீரங்கித் தாக்குதலையும் கலிபர் தாக்குதலையும் நடத்தின இத்தாக்குதலின்போது கரையோரத்தில் நின்றஒருவர் காயமடைந்தார். படகுகளும் சேதமாயின.

நேற்றுமாலை சுமார் 6.15 மணியளவில் அல்லிப்பளை கரையோரமாக விரைந்து வந்த சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான ஐந்து பீரங்கிப் படகுகளே கரையோரத்தின் மீது தாக்குதலை நடத்தின. சுமார் 20 நிமிடங்கள் வரை இத் தாக்குதல்கள் இடம்பெற்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனையிறவுப் பக்கமாக இருந்து திடீரெனகரைநோக்கி வந்த பீரங்கிப் படகுகளில் இருந்து முதலில் பலத்த பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. இத் தாக்குதலின்போது பீரங்கிக் குண்டுகள் கடலிலும் தரையிலுமாக மாறி மாறி வீழ்ந்து வெடித்ததாகவும், பின்னர் ஐந்து படகுகளிலும் இருந்து கலிபர் தாக்குதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத் தாக்குதலின்போது பொது மக்கள் ஒருவர் காயமடைந்ததாகவும்கரையோரத்தில் கட்டப்பட்டிருந்த படகுகள் சேதமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## காரைநகர்இராணுவத்தினர் ஒரு மணிநேர ஷெல்தாக்கு

(தொல்புரம்)

காரைநகர் கசூர்னாபீச் வலந்தலை காவல் நிலைகளிலுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் நேற்று முற்பகல்

கோவில் சேதமுற்றதுடன், சுழிபுரம் சவுக்கடித்துறையில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களின் தொழில் உபகரணங்களும் சேதமாகின.

## அவ்ரோ விமானம் வட்டமிட்டு நோட்டம்

யாழ். குடா நாட்டின் பல பகுதியிலும் நேற்று அவ்ரோ விமானம் பல தடவை வட்டமிட்டு நோட்டமிட்டது

வடமராட்சி, தென்மராட்சி பிரதேசம் உட்பட பலாலி இராணுவ முகாமை அண்டிய பகுதிகளான கட்டுவன், புன்னாலைக் கட்டுவன், ஏழாலை ஆகிய மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்கு மேலாக இவ் அவ்ரோ விமானம் பலதடவை வட்டமிட்டு நோட்டமிட்டது.

தென்மராட்சி பகுதியில் வட்டமிட்ட அவ்ரோ விமானத்தைக் கண்ட மக்கள் பீதியுடன் பாதுகாப்பு இடங்களை நாடி ஓடியதாக தெரிய வருகின்றது

வடமராட்சி பகுதிக்கு மேலாக மூன்று தடவைக்கு மேலாக வட்டமிட்ட இவ் விமானம் நெல்லியடி, உடுப்பிட்டி, வல்லைப் பகுதி ஆகியவற்றை நோட்டமிட்டது. நெல்லியடிப் பகுதி மேலாக தாழப்பறந்த இவ் அவ்ரோ விமானத்தைக் கண்ட மக்கள் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வியாபாரிகள் பதற்றத்துடன் காணப்பட்டனர். (86)(சி) யோ)

## சிங்கள பேராசிரியர் அற்றிபின் விஜயமானா

[கொழும்பு]

இலங்கைத்தீவில் இருப்பவை சொந்தமாக ஒவ்வொரு இராணுவத்தைக் கொண்ட இரு நாடுகளாகும். இந்த சாதாரண, தெளிவான உண்மையை அங்கீகரிப்பதே சமாதானத்திற்கான அடிப்படை என லண்டனில் வசிக்கும் சிங்கள அறிஞர்களில் ஒருவரான அற்றிபின் விஜயமானா தெரிவித்துள்ளார்.

ராவய எனும் சிங்களப் பத்திரிகையில் அவர்எழுதிய கட்டுரை ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எதிர்காலத்தில் உதயமாகவுள்ள ஈழத்திலும் விட சிறிய அளவிலான 36 நாடுகள் ஐ. நா. சபையில் உறுப்பு நாடுகளாகவுள்ளன.

இலங்கையில் நடைபெறும் போரை பொறுத்தவரையில் விடுதலைப்புலிகள் அமைப்பை விட அரசபடைகள் பெரிதாக இருந்தபோதிலும் பல வகையில் போர்ச்செலவுகள் அதிகரிக்கும்போது தோல்வி ஏற்படத்தான் செய்யும். இதில் பொருளாதாரம் மட்டுமல்ல அரசியல் காரணிகளும் உண்டு. பெரிய இராணுவம் ஒன்றை பராமரிப்பதும், வளர்ப்பதும் சிங்கள அரசிற்கு ஆபத்தானதாகவே இருக்கும்.

இலங்கைத்தீவுஇரண்டு நாடுகளாகப் பிரிப்பதற்கு ஏற்றதல்ல இப்படியாக பிரிப்பது இருசிறியநாடுகளைத் தோற்றுவிக்கும் என்றெல்லாம் எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது. ஈழம் பகுதி தவிர்ந்த சிறிலங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களை ஏமாற்றும் இந்திய சஞ்சிகைகள்

(மணிலா)

இலங்கை தமிழ் போராளிகளால் தான் தமிழக சட்டஒழுங்கு குலைந்துவிட்டது! எனக் கூறி போராளிகளுக்கு இருந்த ஆதரவைச் சிதைப்பதில் ஈடுபட்ட உயர் வகுப்பினரால் நடாத்தப்படும் தமிழக இந்தியப் பத்திரிகைகள், இப்போது தமிழ் அகதிகள் சட்டம் ஒழுங்கு சீர்குலைவுக்கு காரண

(4ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய அரசாங்கமா? ஐ.தே.கவிற்கு தெரியாது

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக என்றும் ஐக்கிய தேசியக் கட்சி கூறியது கிடையாது. தேசிய அரசாங்கம் தொடர்பாக பத்

நிருபர் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## ஒரு மணிநேர ஷெல்தாக்கு

(தொல்புரம்)

காரைநகர் கசூர்னாபீச் வலந்தலை காவல் நிலைகளி லுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் பொன்னாலை, சுழிபுரம் கரைப்பகுதி களை நோக்கி அகோர எறிகணை வீச்சினை மேற்கொண் டனர்.

சுமார் ஒரு மணிநேரம் வரை தொடர்ச்சியாகமேற்கொண்ட இத்தாக்குதல் சம்பவத்தின் போது சுழிபுரம் சல்லிக்காடு துறைவளவுத் தோட்டத்தி லுள்ள நாகதம்பிரான் கோவில் சேதமுற்றதுடன், சுழி புரம் சவுக்கடித் துறையில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீன வர்களின் தொழில் உபகரணங் களும் சேதமாகின.

அத்தோடு பொன்னாலை கடற்பரப்பிலும், கரையோர த்தை அண்மித்த பல இடங்க ளிலும் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. இச் சம்பவங் களின் போது தொழிலில் ஈடு பட்டிருந்த மீனவர்கள் காயங் கள் எதுவும் இன்றி கரைசேர்ந் துள்ளனர் என மீனவர் தரப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(41)

## அராலிக்கடலில் மீன்பிடித்த இருவர் கடற்படையால் கைது

(யாழ்ப்பாணம்)

அராலி கொட்டக்காட்டு கடலில் மீன்பிடித்துக்கொண் டிருந்த இரு மீனவர்கள்நேற்று அதிகாலை சிறிலங்கா கடற் படையினரால் கைதுசெய்யப் பட்டதாக தெரியவருகின்றது.

இது பற்றி தெரியவருவதா வது நேற்று முன்தினம் இரவு தொழிலுக்காக கட லுக்கு சென்ற மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டுக் கொண் டிருந்த போது அவர்களை நோக்கி அதிகாலை வேளை சிறிலங்கா கடற்படையினரின் இரண்டு விசைப்படகுகள் வந் ததை கண்டதாகவும் மீனவர் கள் உடனடியாக அப்பகுதி யில் இருந்து கரையை நோக்கி வந்துவிட்டதாகவும் அப் போது கடற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு இரண்டு மீனவர்கள் கைது செய்யப்பட் டதாகவும் தெரியவருகின்றது. கைது செய்யப்பட்ட மீனவர் சாவக்காட்டை சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகின்றது.

(சி)

ஆகிய மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்கு மேலாக இவ் அவ்ரோ விமானம் பலதடவை வட்டமிட்டு நோட்டமிட்டது.

தென்மராட்சி பகுதியில் வட்டமிட்ட அவ்ரோ விமா னத்தைக் கண்ட மக்கள் பீதி நெல்லியடிப் பகுதி மேலாக தாழப்பறந்த இவ் அவ்ரோ விமானத்தைக் கண்ட மக்கள் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வியாபாரிகள் பதற்றத்துடன் காணப்பட்ட னர். (86)(சி) யோ)

## ஸ்கொட்லன்யார்ட் முடிவு; லலித் மனைவி நிராகரிப்பு

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலியின் கொலைக்கு ஆளும்கட்சி காரணமல்ல இக்கொலை யுடன் விடுதலைப் புலிகள் அமைப்பே தொடர்பு கொண் டிருக்கின்றது என ஸ்கொட் லண்ட் யார்ட் துப்பறியும் நிறு வனம் தெரிவித்துள்ளதை திரு மதி சிறிமானி அத்துலத்முதலி நிராகரித்துள்ளார்.

விடுதலைப் புலிகளே இக் கொலைக்கு காரணம் என்ற பொதுவான யூகத்தின் அடிப் படையில் தான் ஸ்கொட் லண்ட் விசாரணைக்குழுவின் துப்பறிவாளர் எட்வேட் தனது அறிக்கையை தயாரித் திருக்கின்றார் என திருமதி அத்துலத்முதலி கூறினார். பிரேமதாசா அரசே இக் கொலைக்கு காரணம் என அவர் மீண்டும் வலியுறுத்தி கூறிவருகிறார்

ஸ்கொட்லண்ட் யார்ட் அறி க்கையை கண்டித்துள்ள திரு மதி அத்துலத்முதலி இது குறி த்த தமது நீண்ட மறுப்பறிக் கையை தம் வழக்கறிஞர்கள் வெளியிடுவர் என்றும் மக் களை ஏமாற வேண்டாம் என் றும் நேற்று கேட்டுக் கொண் டார்.

ஸ்கொட்லண்ட் யார்ட் 12 பக்க அறிக்கையை முன்னதா கவே சிலமுடிவுகளை எடுத் துக்கொண்டு அதற்கேற்ப தயாரிக்கப்பட்டதுபோல் உள் ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

பல்லேகல முகாமிலிருந்து

## விடுவிக்கப்பட்ட 15 பேர் வடபகுதி வந்து சேர்ந்தனர்

(வவுனியா)

பல்லேகல தடுப்புமுகாமி லிருந்து விடுதலையாகிய 15 தமிழ் இளைஞர்கள் வவுனியா ஊடாக வடபகுதி வந்து சேர்ந்துள்ளனர். இவர்களில் எட்டுப்பேர் 15ஆம் திகதியும் ஏழு பேர் நேற்றும் வடபகுதிக் குள் வந்து சேர்ந்தனர்.

பாக்கியநாதன் அன்ரன் (வயது30, 287 எட்டாம்குறுக் குத் தெரு, மணிப்புரி, யாழ்ப் பாணம்) செபஸ்ரியான் எடின் பரே வயது17, 30 தண்ணீர் தாங்கி வீதி குருநகர்), சேவியர் மதுரானந்தன்(வயது16 வி-15 தொடர்மாடி குருநகர்) மக்தி மன் யூட் ஜெபிரியன் (வயது 19, 45/1 புதியகடற்கரைவீதி யாழ்ப்பாணம்), வீரோரி -யோன்ஸ் (வயது 24, 19 முத லாம் குறுக்குத்தெரு, குருநகர்) அகஸ்ரின் யூலியட் பாலா (வயது 29, 30 தண்ணீர் தாங்கி வீதி, குருநகர்), மனு வேல் அன்ரன் (வயது44, 34 இரண்டாம் குறுக்குத் தெரு, வேளாங்கன்னிச் சந்தி, குரு நகர்), ஏறேனி பிரான்சீஸ் (வயது40, 46/47 புனித அந் தோனியார் வீதி, பாசையூர், யாழ்ப்பாணம்) ஆகியோரே 15ஆம் திகதி வடபகுதிக்குள் வந்து சேர்ந்தவர்கள் ஆவர்.

மேலும் சூட்டைப்பிள்ளை ஜேசுதாஸ் (வயது 33, சுப்பர் மடம், பருத்தித்துறை),

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொஸ்ரரிக்காவில் தமிழர் கேவல நடத்தை

(சான்ஜோஸ்)

மத்திய அமெரிக்க நாடான கொஸ்ரரிக்காவில் அதிகாரி களால் பலவந்தமாக இலங்கை திருப்பி அனுப்பப்படவிருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் விமானநிலையத்தில் நிர்வாண மாக ஓடி தாம் திருப்பி அனுப் பப்படுவதை தவிர்த்துக் கொண்டசம்பவம்ஒன்று நடை பெற்றுள்ளது.

இவர்களில் பெரும்பாலான வர்கள் இளைஞர்கள் எனக் கூறப்படுகிறது. விமானம் ஒன் றில் இந்த 17 அகதிகளையும் திருப்பியனுப்ப கொஸ்ரரிக்கா அதிகாரிகள் ஏற்பாடு செய்த னர் ஹோட்டல் ஒன்றில் தங்கவைக்கப்பட்ட இவர் கள் அங்கிருந்து விமான நிலை யத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டனர். இவர்கள் ஆடை கள் ஏதும் அணியமறுத்து வெறுமனே ஒருதுண்டு மட்டும் கட்டிக்கொண்டு 17 இலங்கை அகதிகளும் விமான நிலையத் திற்கு பொலிசார் உடன் வந்த தாக தெரிவிக்கப்படுகிறது.

விமான நிலையத்தில் அவர் களை ஏற்றிக்கொண்டு கிளம்ப இருந்த விமானம் புறப்பட சிறிது நேரமே இருந்தபோது இந்த 17 பேரும் தாம் கட்டி யிருந்த துண்டை அவிழ்த்து விட்டு நிர்வாணமாக ஓடினர். இதை சற்றும் எதிர்பாராத அதிகாரிகளும் பொலிசாரும் செய்வதறியாது திகைத்து நின்றனர். இதனால் இவ் அகதிகளை திருப்பி அனுப்ப முடியாமற் போனதாக தெரி விக்கப்படுகிறது.

## ஏழு தமிழ் வாலிபர்கள் கொழும்பில் கைது

(கொழும்பு)

கடந்த புதன்கிழமை தெகி வளையில் வைத்து கோல சீருடை அணிந்தவர்களினால் கைது செய்யப்பட்ட 7 தமிழ் வாலிபர்களும் தடுத்து வைக் கப் பட்டிருக்கும் இடங்களை அறிய அவர்களின் உறவினர் கள் பொலிஸ்மா அதிபரின் உதவியை நாடியிருக்கிறார் கள்.

வடக்கில் இருந்துவெளியேறி சென்று கொழும்பில் தங்கியிரு ந்த இவ்வாலிபர்கள் தெகிவ ளையில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக என் றும் ஐக்கிய தேசியக் கட்சி கூறியது கிடையாது. தேசிய அரசாங்கம் தொடர்பாக பத் திரிகையில் மட்டுமே நான் காண்கின்றேன் என சிறி லங்கா பிரதமர் ரணில் விக் கிரமசிங்க தெரிவித்தார்.

தேசிய அரசாங்கம் தொடர் பாக அரசாங்கத்தின் நிலைப் பாடு என்ன என்று சந்தேசிய நிருபர் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்; "நாம் அரசியல் அமை ப்பை முழுமையாக ஆராய்ந்து வருகிறோம். அதன் பின்னரே இது தொடர்பாக எதுவும் கருத்து தெரிவிக்க முடியும்" என்றார்.

தேசிய அரசு ஒன்றை

## அரசாங்கம் விரும்பினால் இணையத் தயாராம்

"தேசிய அரசாங்கம் என்ற அடிப்படையில் ஐக்கிய தேசி யக் கட்சியுடன் இணைய நாம் தயாராக இருக்கிறோம். மேலும் வடக்கு-கிழக்கு பிரச் சினைக்கு ஒரு நிலையான தீர்வு ஏற்பட அரசாங்கம் உதவி எதுவும் கோருமானால் நாம் செய்ய தயாராக இருக் கிறோம்" என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பொதுச் செயலாளர் ஜி எம். பிரேமச்சந்திர தெரிவித்தார்.

"தேசிய அரசாங்கம் தொடர்பாக அரசாங்கம் முயன்றால் மட்டுமே நாம் அதில் இணைய தயாராக இருக்கிறோம். வடக்கு-கிழக்கு பிரச்சினையை சிக்கலாக்காது முடிவுகாண வேண்டும் என் பதே எமது விருப்பம்" என மேலும் அவர் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டிற்கான

## நிவாரண சேவைகள் குறித்து அதிகாரிகள் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் நிவா ரண சேவைகள் குறித்து அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் குழுவினர் கொழும்பில் பல்தரப்புப் பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றனர்.

யாழ். மாவட்ட அரசசார் பற்ற நிறுவனங்களின் இணை யத்தைச் சேர்ந்த அதிகாரி களான திரு. ஆர். பால கிருஷ்ணன், திரு. எல். ஆர். முத்தையா, திரு. எம். தம்பித் துரை, கே. ஜீவகதாஸ் ஆகிய நால்வர் கொண்ட அதிகாரி கள் குழுவினரே தற்பொழுது கொழும்பில் தங்கியிருந்து மேற்படி பல்தரப்பு பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வரு கின்றனர்.

மேற்படி அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் குழுவினர் பல்வேறு உள் நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளுடன் மட்டுமன்றி அரச அதிகாரிகள் மற்றும் மதத்தலைவர்கள் ஆகியோரு டனும் பேச்சுவார்த்தை நடா த்திவருகின்றனர்.

மேற்படி பல்தரப்புப் பேச்சு வார்த்தைகளின்போது யாழ்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### திருத்திக் கொடுக்கப்படும்

தமிழ் ஆங்கில தட்டச்சு இயந்திரம், பிரதி பண்ணும் இயந்திரம் சிறந்த தொழில் நுட்பவல்லுநர்களால்குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும். றொச்ஷூட GR மருதலிங்கம் 8/1, E அம்மன் வீதி, கந்தர் மடம் யாழ்ப்பாணம் 5211)

### கார் கசற் றேடியோக்களா? கடிகாரங்களா?

மேற்குறிப்பிட்டவை யாதேனும் பழுதடைந்தால் அநுபவம் குறைந்தவர்களிடம்திருத்தக் கொடுத்து பழுதையும் செலவையும் கூட்டிக் கொள்ளாமல் எம்மிடமே தந்து சிரமமின்றி குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள் டில்கா வாச்அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-6937)

### மென்பானங்கள்

SUNRISE மென்பானங்கள் சுத்தமானவை சுவையானவை பருகிக்களிப்படைவீர் தயாரிப்பு விநியோகம்சிவா இண்டஸ்றீஸ் 35/3 கொழும்புத்துறைசாலை சுண்டுக்குளி. (சி-6986)

### விற்பனைக்கு

புதிதாகச் செய்யப்பட்ட ஒற்றை மாட்டுவண்டில் (A-30 ரயர்கள் பொருத்தப்பட்டது) விற்பனைக்குண்டு. தொடர்பு: தருமு தேங்காய்க் கடை, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (சந்தை முன்பாக) (5395)

### வியாபாரிகட்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள். லேஸ், நூல் வகைகள், எவர்சில்வர் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகு சாதனப் பொருள்களை நிதான விலைக்கு மொத்தமாக பெற்றுக் கொள்ள-ஜெயா அழகுசாதன மாளிகை, 177-A, மின்சார வீதி, யாழ்ப்பாணம். (சி 6968)

### உடன் விற்பனைக்குண்டு

½மாதம் வளர்த்தியடைந்த கைலைன் பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகா பதி'' மானிப்பாய். [5404]

---

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்

## பாண்சாலை திருத்தக் கேள்வி

எமது சங்கத்தின் பாண்சாலையின் போறணையை பிரித்து, புதிதாக அமைப்பதற்கான கேள்விகளை 25-07-1993-ம் திகதிக்கு முன்னர் நேரில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கரவெட்டி,
14-07-1993 பொதுமுகாமையாளர்.

(சி-7023)

---

# பதவி வெற்றிடம்

**பதவி:-** வெளிக்கள உத்தியோகத்தர், தகவல் சேகரிப்பாளர்

**கல்வித் தகைமை:** க. பொ. த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். வர்த்தகம், கணக்கியல் ஆகிய பாடங்களில் சித்திபெற்றிருத்தல் விசேட தகைமைகளாகக் கருதப்படும்.

**வயதெல்லை:** 26 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி:** **22. 07. 1993**

**அனுப்பவேண்டிய முகவரி:-**

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்,
மாவட்டச் செயலகம்,
கோண்டாவில்.

குறிப்பு:- (1) யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து உதவி அரச அதிபர் பிரிவுகளிலிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(2) விண்ணப்பதாரிகள் அனைவரும்23-ம் 24 ம் திகதிகளில் காலை 9. 00 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக யாழ் மாவட்டச் செயலக பொன்னம்மான் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறும் நேர்முகப்பரீட்சைக்கு தவறாது சமுகம் அளித்தல் வேண்டும். எந்தப் பரீட்சார்த்திக்கும் தனிப்பட்ட அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படமாட்டாது.

(சி|7024)

---

ஜோ எகட்டனின்
ஜெசித்தாராவின்

**விரதச் சாப்பாடு**
ரூபா 25/- மட்டும்

---

கட்டைவேலி – நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்

## சேமிப்புக் கணக்கு மீதியை உறுதிப்படுத்தல்

எமது சங்கத்தின் கிராமிய வங்கியிலும், சங்கத்திலும் வைப்புக் கணக்குகள் வைத்து வருகின்றவர்கள், தங்களது பற்று வரவுப் புத்தகங்களை 23-07-1993, 24-07-1993 ஆகிய தினங்களில் சங்கத்தில் சமர்ப்பித்து மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம். தவறின், சங்கப் புத்தகங்களின் மீதிகளே சரியென ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படும்.

கரவெட்டி, பொ. சிற்றம்பலம்,
14-07-1993 பொதுமுகாமையாளர்.

[சி-7022]

---

## 6-ம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 24 – 02 – 1968



வீரச்சாவு 18 – 01 – 1993

### மேஜர் அருண்மொழி [கௌதமன்]

(சுப்பிரமணிய சத்தியேந்திரன்)
(திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்)

புத்தனின் நாமம் புனைந்தவன் நடத்திய
சத்திய வேள்வியால் புது சரித்திரம்
எழுந்ததங்கே — பெரும்
பித்தர்கள் படைகொண்டு நித்தமெமை
அழிக்கையில்
சுற்றம் துறந்தன்று போரிடப் புகுந்தவன் - இன்று
சட்டத்துள் அடங்கிட எழுந்த சரித்திரமும்
அழுகிறது.

உமது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

எமது இல்லத்தில் இன்று (18 07 1993) நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரிகைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

49/7, வில்வந்தெரு வீதி.
அரியாலை,
யாழ்ப்பாணம். (5373) - குடும்பத்தினர்

---

# நினைவஞ்சலி

---

## கொழும்பு ஸ்ருடியோ

நினைவஞ்சலி, சரமகவிக்குத் தேவையான (*BLOCKS*) பழைய படங்களிலிருந்து – அந்தியேட்டிக்குத் தேவையான புகைப்படங்கள், உறுதியான றபர்சீல் - ஸ்ரிக்கேஸ் தேவைப்படும்போது எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**கொழும்பு ஸ்ருடியோ
55, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.**

(சி-6952)

---

## நினைவு கூருகின்றோம்... 1993-07-18

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ். பழைய பூங்கா வீதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட திடீர்ச் சோதனையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**அலெக்ஸ்/சின்னக்கண்ணாடி** (வேதரெத்தினம் மொறிஸ் றெஜினோல்ட் - கொய்யாத்தோட்டம் - யாழ்.)

**வாசன்** [ஐயம்பிள்ளை மணிவாசகம் - 14-ம் வட்டாரம், நெடுந்தீவு கிழக்கு - யாழ் ]

1986ஆம் ஆண்டு மணலாறு - நெடுங்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 5 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு யாழ். மாவிட்டபுரத்தில் கொல்லங்கலட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

**சின்னண்ணா** [சின்னத்துரை காங்கேயன் - கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம் - யாழ் ]

**குஞ்சு/பவான்** ( — — கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம் - யாழ்.)

1988ஆம் ஆண்டு வவுனியா - இராஜேந்திரங்குளம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**வைத்தி** (பாலசிங்கம் இராஜேந்திரம் - இராஜேந்திரங்குளம் - வவுனியா)

பரந்தனில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

வல்வெட்டித்துறை - கம்பர்மலைப் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன தமிழிளைஞன்.

1989ஆம் ஆண்டு மட்டு - பழுகாமம் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய -

**ஆதவன்** (சொர்ணலிங்கம் சசிகரன் - முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை - மட்டு.)

யாழ் - ஏழாலையில் இந்தியப் படையினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். அனுசன்** (சிவராசா சபேஸ்குமார் - சூராவத்தை, சுன்னாகம் - யாழ்.)

1991ஆம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின்போது வெற்றிலைக்கேணியிலிருந்து முன்னேறிய இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

**கப்டன் ஸ்ராலின்** (செல்வராசா தியாகராசா - அரசடி வீதி, கொக்கட்டிச்சோலை - மட்டு )

விற்பனைக்குண்டு

½மாதம் வளர்த்தியடைந்த கைலைன் பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகா பதி'' மானிப்பாய். [5404]

சுவிற்சர்லாந்தில் கண்காட்சி

பழமை வாய்ந்த Wyler Invicta West-end Damas Rolex போன்ற தங்க நிறக் கடிகாரங்கள் சுவிற்சர்லாந்தில் கண்காட்சிக்கு அனுப்புவதற்காக நியாயமான விலைக்கு எம்மால் வாங்கப்படும். (பழுதடைந்த நிலையிலுள்ள கடிகாரங்களானாலும் சரி) டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [சி/7032)

ஜெசித்தாராவின்

விரதச் சாப்பாடு

ரூபா 25/- மட்டும்

மற்றும்

இறைச்சிச் சாப்பாடு 30/-

மீன் ,, 30/-

மற்றும் உணவு வகைகளுக்கு எம்மை நாடுங்கள்

ஜெசித்தாரா,
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன்ஒழுங்கை,
சுண்டுக்குளி.
[சி-7019]


# 6-ம் ஆண்டு அஞ்சலி

பிறப்பு: 22 — 01 — 1957



வீரச்சாவு: 18 — 07 — 1987

## வீரவேங்கை சின்னண்ணா

(சின்னத்துரை காங்கேயன்)

கிளானை, கொல்லங்கலட்டி

ஆண்டுகள் ஆறு சென்றதடா
ஆறவில்லை எம் மனது
புலியாகப் பாய்ந்து பல களமாடி
மாவையிலே மாவீரரானவனே!
காலங்கள் கடந்தாலும் — நீ
பதித்த கோலங்கள் மறையாது.


சத்தியநாதன் வீதி
சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

(5323)

# நினைவஞ்சலி





வீரவேங்கை **அன்பழகன்**
[கோபாலர் விஸ்வேஸ்வரன்]
[இயக்கச்சி]
தமிழ் மண்ணில் 21-09-1970 மண் மீட்பில் 09 07-1992

**லெப். நெல்சன்**
[கோபாலர் சுந்தரேசன்]
[வெற்றிலைக்கேணி ஆனையிறவு]
தமிழ் மண்ணில் 25 11-1971 மண் மீட்பில் 18-07-1991

இன்பத் தமிழ்மண் மீட்பில் திளைத்தே
வன்புப் படையை எதிர்த்து மோதியே
அன்பழகனும் இயக்கச்சிப் போரில்
மண்பதம் நாடித் தன் குறிக்கோள் பேணினன்
உன் முகம் கண்டு ஆண்டொன்றானதே

சுந்தரத் தீவின் இலட்சிய வேங்கையாய்
அந்தர வெளியாம் வெற்றிலைக் கேணியில்
சுந்தரன் நெல்சனும் தமிழ் மானப்பேரினில்
இந்த மண்ணின் விடிவில் ஒளி வீசினன்
அந்தர வானில் ஈராண்டு சென்றதே.

எம் செல்வங்கள் இருவருடனும் மண்மீட்புப் போரில் மாவீரரான வேங்கைகள் அனைவருக்கும் எங்கள் அஞ்சலிகள்.

198, கோயில் வீதி,
நல்லூர்.

தாய், சகோதரர்கள்.

(5319)

1991ஆம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ. க. வெ. நடவடிக்கையின்போது வெற்றிலைக்கேணியிலிருந்து முன்னேறிய இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய -

**கப்டன் ஸ்ராலின்** (செல்வராசா தியாகராசா - அரசடி வீதி, கொக்கட்டிச்சோலை - மட்டு)
**விமல்** (கதிர்காமப்போடி குகதாஸ் - 9-ம் வட்டாரம், கொக்கட்டிச்சோலை - மட்டு.)
**லெப். மிராண்டா** (வீரபுத்திரன் சுரேந்திரன் - பன்குளம் - திருமலை)
**2-ம் லெப். கோகிலா** (மங்கையர்திலகம் குணநாயகம் - கண்ணகிபுரம், உவர்மலை - திருமலை)
**2-ம் லெப். சுரேந்தினி** (அமராவதி பொன்னையா - செந்தூர் வீதி, திரியாய் - திருமலை)
**மேகன்** [ஆறுமுகம் அரசரத்தினம் - வெருகல், மூதூர் - திருமலை]
**கதிர்** (கிருஷ்ணபிள்ளை பாலச்சந்திரன் - முள்ளிப்பொத்தானை, தம்பலகமம் - திருமலை)
**சீலன்** (குட்டி தெய்வேந்திரம் - 8-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)
**குரு** (மாரிமுத்து தயாநிதி - திருநகர் - கிளிநொச்சி)
**டிலா** [செபத்தியம்மா (ஆனந்தி) நீக்கிலாப்பிள்ளை - முருங்கன் - மன்னார்]
**கப்டன் ஈழவன்** (குமாரசாமி ரமேஸ்குமார் - 19/1, ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை - யாழ்)
**லெப். நெல்சன்** (கோபாலர் சுந்தரேசன் - கீரிமலை, காங்கேசன்துறை - யாழ்.)
**லெப். எனி** [மதிமஞ்சுளா செல்லையா - மயிலிட்டி, காங்கேசன்துறை - யாழ்)
**லெப். கோவிந்தன்** (நடராசா சீத்தாகுமார் - அலவாய் தெற்கு, யாழ்.)
**2-ம் லெப். குமுதன்** (வைத்திலிங்கம் தயாளன் - சனசக்தி சனசமூக நிலையம், நீர்வேலி - யாழ்.)
**கஜன்மாமா** (சுந்தரராஜா மகேஸ்வரன் - அராலிதெற்கு, வடடுக்கோட்டை - யாழ்.)
**பிரான்சிஸ்** (கதிரவேல் குமாரவேள் - துன்னாலைதெற்கு, கரவெட்டி - யாழ்.)
**சைமன்** (சைமன் அந்தோனி ஜோசப் மைக்கல் பிரதீப் - யாழ். வீதி, மானிப்பாய்)
**குரு** (பரராசசிங்கம் விமலேஸ்வரன் - 7/8, லெப். கேணல் பொன்னம்மான் வீதி - யாழ்)
**நவீனன்** (திருலோகசிங்கம் அன்பழகன் - கீரிமலை வீதி, காங்கேசன்துறை - யாழ்)
**லோகன்** (கந்தையா வசீகரன் - கரணவாய் தெற்கு, கரவெட்டி - யாழ்.)

1992ஆம் ஆண்டு இயக்கச்சியில சிறிலங்கா இராணுவம குறி வைததுத் தாக்கியதில் வீரச்சாவெய்திய -

**மணிமுடி/குட்டி** (தவபாலசிங்கம் தெய்வீகநாதன் அல்லாரை தெற்கு, கொடிகாமம் - யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-7030)

### சிந்தனைக்கு

நாடுகள் படைக்கபபடுவதி லலை; ஒட்டுப் போட்டு உருவாக்கப்படுவதில்லை; பல நூற்றாண்டுகளாகப் படும் வேதனையின் பயனாக, படிப் படியாக வளர்ந்து வலுப் பெறுபவை அவை.

- ஜான் மேஸ்ஃபீல்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 18-07-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# தமிழர் தாயகமும் அரசமரமும்

எங்கோ ஒரு மூலையில் இயற்கையாகவே வளர்ந்து விட்ட அரசமரம். அதன் கீழ் இரவோடு இரவாக உருவாகும் ஒரு குட்டி விகாரை. அதைத் தொடர்ந்து அங்கு ஒரு மணியுடன் காவி உடை தரித்த ஒரு பௌத்த பிக்கு. இவையே சிங்களக் குடியேற்றத்தின் ஆரம்பம். தமிழர் தாயகத்தின் மீதான ஆக்கிரமிப்பின் தொடக்க வடிவம்.

பின்னர், பிக்குவால் அரசாங்கத்தின் உதவியுடன் சிங்களக் காடையர்களும், கிரிமினல்களும் திரட்டப்படுவர். அவர்களுக்கு அரசாங்க உதவிகள் பொருளாகவும், பணமாகவும் வழங்கப்படும். இன்று பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழரைக் கொல்ல ஆயுதங்களும் வழங்கப்படும். இவற்றிற்குப் பாதுகாப்புப் படையினரின் பாதுகாப்பும் கிட்டும். நகர்ப்புற ஆக்கிரமிப்பு மேலே குறிப்பிட்டதிற்கு சற்று மாறுபட்டதாக இருக்கலாம். ஆனால் அங்கும் மையம் அரசமரமும், விகாரையும், பௌத்த பிக்குவுமே ஆகும். அதில் மாறுபாடு எதுவுமில்லை.

இந்தவகையில்தான் இன்று வவுனியா நகர் ஆக்கிரமிக்கப்படுகின்றது. அண்மையில் கூட வவுனியா யாத்திரிகர்கள் விடுதிக்குள் புகுந்து பத்துக் கடைகளை சிங்களவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். வவுனியா நகரில் உள்ள விகாரையின் பிரதம குருவின் ஏற்பாட்டின் பேரிலேயே இது நடைபெற்றுள்ளதாக அறிய முடிகிறது. பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் ஒத்துழைப்புக் காரணமாக தமிழ் அரச அதிகாரிகளால் இதற்கு எதிராக ஒன்றும் செய்யமுடியவில்லை.

ஆனால், இவ் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் யாவற்றிற்கும் பின்னணியில் அரசாங்கமே உள்ளது. அவற்றிற்குரிய செலவீடும், பாதுகாப்பும் அரசாங்கமே செய்து கொடுக்கின்றது. ஆனால், இதனை யுத்தத்தின் விளைவே எனக் கூறும் விதண்டாவாதிகளும் உண்டு. ஆனால், குடியேற்றத்தின் விளைவே யுத்தம் என்பது யதார்த்தமாகும்.

சிங்களப் பேரினவாதம், யுத்தம் ஆரம்பிப்பதற்கு இரு தசாப்தத்திற்கு முன்னரே தனது ஆக்

# பொலிஸ் நிலையம் திறப்பதற்காக அகதிமுகாம் மூடப்பட்டது

(மன்னார்)

இந்தியாவிலிருந்து திரும்பிய தமிழர்களுக்காக மன்னார் தீவிலுள்ள சனி விலேஜ் கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த அகதிகள் முகாம் அண்மையில் மூடப்பட்டுள்ளது

அதே வேளை அவ்இடத்தில் பொலிஸ் நிலையம் திறப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

இந்தஅகதிகள்முகாமில் 112 குடும்பங்களை சேர்ந்த 426 பேர் தங்கியிருந்தனர். சிறிலங்கா பொலிஸ் நிலையம் அமைக்கப்படுவதற்காக அங்கிருந்து இவர்களைவெளியேற்றி பேசாலைக் கிராமத்தில் இருக்கும் ஐ நா. அகதிகள் உயர் ஸ்தானிகராலயத்தால் பராமரிக்கப்படும் அகதிகள் முகாமில் குடியமர்த்த மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் மரியதாசன் குருஸ் மேற்கொண்ட முயற்சிக்கு இவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸ் நிலையம் திறக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து அகதிகள் அங்கிருந்து வெளியேறி தத்தம் நண்பர்கள் மற்றும்உறவினர் இல்லங்களில் தங்கிவாழ்கின்றனர்.

இலங்கை வானொலிக்கு

## தமிழ் கலைஞர்களின் ஒத்துழைப்பு இல்லையாம்

### பணிப்பாளர் கவலை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் நிகழ்சிகளில் பெரும் பங்களிப்புச் செய்து வந்த தமிழ்க் கலைஞர்கள் பலரும் இப்போது கூட்டுத்தாபனத்துடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை என்று ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கவலை அடைந்துள்ளது.

இதனால் குறிப்பிட்ட சில கலைஞர்களே தொடர்ந்தும் பங்கேற்று வருவதாகவும், இதனையிட்டு பரவலாக குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

நிகழ்ச்சிகளில் பங்கேற்கும்படி கோரி பல கடிதங்கள் அனுப்பப்பட்ட போதும் ஒரு சிலரே நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருவதாகவும் மேலும் கூறப்படுகின்றது.

வானொலி நாடகத்தில் புது மாற்றங்கள் அறிமுகம் செய்யப்பட இருக்கும் இத்தருணத்தில் தமிழ் கலைஞர்கள் ஒத்துழைப்பு நல்க முன்வராமல் இருப்பது கவலையளிப்பதாக தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் சிவராஜா கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ் நாளிதழ் ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கையில் கூறியுள்ளார்.

## ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்

கைக்கடிகாரம் ஒன்று ஆடியபாதம் வீதி அரசடி அம்மன் சந்தியில் ஏகாம்பரநாதன் சுதாகர் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் நேரில்வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்

## நான்காம் ஆண்டு நிறைவு விழா

(குருநகர்)

சைவ சித்தாந்த ஆய்வுவட்டத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழா இன்று காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகும்.

கலாநிதி வண. நீ. மரியசேவியர் அடிகள் தலைமையில் நடைபெறும். மேற்படி விழாவில் திருவுந்தியார் இசையுடன் பாடல், சிறப்புரைகள் மற்றும் சமயத்தூது இசை உரைச் சித்திரம் என்பன இடம் பெறும். (21)

கொழும்பு வாழ் தமிழருக்கு

## வாக்காளர் விண்ணப்பம் வழங்க அதிகாரிகள் மறுப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இடம்பெயர்ந்து சென்று கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் வாழும் தமிழர்களுக்குவாக்காளர்களாக பதிவு செய்வதற்கான படிவங்கள் வழங்க அதிகாரிகள் மறுப்பு தெரிவித்து வருகின்றனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு, கிழக்கு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வந்திருப்பவர்களுக்கு வாக்காளர் விண்ணப்பம் படிவம் வழங்கப்படக் கூடாது என்று மேலிடம் உத்தரவு பிறப்பித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக அகதிகளுக்கான கொடுப்பனவுகளுமின்றி, அகதிகளுக்கான நிவாரணமுமின்றி இவர்கள் தொல்லைப்படுவதாகவும் தெரியவருகிறது.

அம்பாறை மாவட்டத் தமிழர் வீடுகளிலிருந்து

## யன்னல், கதவுநிலை, கற்கள் ஏற்றிச் செல்லப்படுகின்றன

(காரைதீவு)

வன்செயல் நடவடிக்கைகள் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த தமிழர்களின் வீடுகளில் இருக்கும் ஜன்னல்கள் கதவுகள் என்பன அப்புறப்படுத்தப்படுவதோடு சுவர்களும் இடிக்கப்பட்டு கற்களும் ஏற்றிச்செல்லப்படுவதாக அங்கிருந்துவரும் தகவல்கள் கூறுகின்றன.

மேலும் இடம்பெயர்ந்த தமிழ்மக்களின் வளவுகளுக்குள் இருக்கும் மரங்களும் வெட்டி எடுக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

குறிப்பாக அம்பாறைமாவட்டத்தின் வீரமுனை, கோரக்கர் கோயில் கிராமங்களில் அக்கிராமத்தை சூழ இருக்கும் சிங்கள மற்றும் முஸ்லிம் கிராமங்களைச் சேர்ந்தவர்களால் இத்தகைய அடாவடித்தனமான செயல்கள் மேற்கொள்ளப்படுவதாகக்கூறப்படுகிறன.

## வருடாந்த மெய்வல்லுநர் போட்டி

(பூநகரி)

மன்னார் மாவட்டம் பூநகரி நல்லூர் பாடசாலையின் வருடாந்தமெய்வல்லுநர் போட்டி கடந்த வியாழனன்று நண்பகல் ஒருமணியளவில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் பொன் தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி மெய்வல்லுநர் போட்டியில் தமிழீழ தேசியக் கொடியை பூநகரி முழங்காவில் மாணவரமைப்பு பொறுப்பாளர் ஆனந்தராஜ் ஏற்றி வைத்தார்.

வங்கக் கடலில்

## இந்தியா போர்ப் பயிற்சி

(சென்னை)

அடுத்த இரு வாரங்களுக்கு வங்காள விரிகுடாவில் இந்திய கடற்படையின் பாரிய போர்ப் பயிற்சி ஒன்று நடைபெறவுள்ளது. இதற்கென இந்திய கிழக்கு, மேற்குப் பிராந்தியக் கடற்படைகளின் போர்க்கப்பல்கள் நீர்மூழ்கிகள் என்பன சென்னை வந்துள்ளன.

போர்க்கப்பல்களுடன் இந்திய விமானப்படையின் போர் விமானங்களும், குண்டுவீச்சு விமானங்களும் கடலோரக் காவற்படையும் இப்பயிற்சியில் ஈடுபடவுள்ளன.

## காஷ்மீர் மோதலில் ஆப்கான் போராளி பலி

(டில்லி)

காஷ்மீரின் வடக்கே காட்டுப்பகுதியில் இந்திய இராணுவத்துடனான மோதலில் ஓர் ஆப்கான் போராளி உட்பட மூன்று காஷ்மீர் முஸ்லிம் போராளிகள் பலியானதாக இந்திய அதிகாரிகள் கூறினர். இப்பகுதியில் தொடர்ந்து மோதல் நடைபெறுகிறது.

காஷ்மீர் முஸ்லிம் போராளிகளுக்கு ஆப்கான் போராளிகள் உட்பட பல முஸ்லிம் போராளி அமைப்புகள் உதவும் முகமாக தமது போராளிகளை காஷ்மீருக்கு அனுப்பியுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியானமை தெரிந்ததே

## அமெ. போர் விமானங்கள்

பழநி இடைத்தேர்தல்

# புதிய வேட்புமனு எதுவும் ஏற்கப்படமாட்டாது

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு

(டில்லி)

பழநி நாடாளுமன்ற மக்களவைத் தொகுதிக்காக அடுத்த மாதம் 19ஆம் திகதி நடைபெறும் போது புதிய வேட்பாளர்கள் எவரும் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையகம் நேற்றுமுன்தினம் புதுடில்லியில் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்

தேர்தலிருந்து எந்தவொரு வேட்பாளரும் வேட்புமனுவை விலக்கிக்கொள்ள முடியாது என்றும், தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

மேமாதம் 17-ம் திகதியன்று நடைபெறுவதாக இருந்த தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதால் இது தொடர்பான மேலதிக உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் எதுவும் வெளியிடப்படமாட்டாது எனவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதேவேளை, ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கான ஆகஸ்ட் 19-ம் திகதியன்று நடைபெறவிருக்கும் இடைத்தேர்தலில்,மாநில ஜனதாக் கட்சித்தலைவர் திருமதி சந்திரலேகா போட்டியிடவுள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பூமியதிர்ச்சியில் இறந்த

றத்தின் விளைவே யுத்தம் என்பது யதார்த்தமாகும்.

சிங்களப் பேரினவாதம், யுத்தம் ஆரம்பிப்பதற்கு இரு தசாப்தத்திற்கு முன்னரே தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் இறங்கி விட்டது. யுத்தம் எண்பதுகளின் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டபோது கணிசமான தமிழர் தாயகத்தை சிங்களப் பேரினவாதம் கபளிகரம் செய்து விட்டது. அவ்வேளையில் கிழக்கில் மட்டுமல்ல வடக்கிலும் தனது காலை அகல வைக்கத் தொடங்கிவிட்டிருந்தது. கிளிநொச்சி, யாழ். நகர் காங்கேசன்துறை ஆகிய இடங்களிலும் அரசமரமும் - விகாரையும் - பௌத்த பிக்குகளும், சிங்களப் பயணிகள் தங்குமிடங்கள் எனவும் விரிவாக்கங்கள் ஆரம்பிக்கத் தொடங்கிவிட்டிருந்தன.

இந்நிலையில், எண்பதுகளில் யுத்தம் ஆரம்பிக்கப்படாது இருந்திருக்குமானால் இன்று மேற்குறிப்பிட்ட இடங்களில் கணிசமான பகுதிகளைத் தமிழர்கள் இழந்திருக்க வேண்டி வந்திருக்கும். சில பகுதிகளைத் தவிர்த்து நடமாட வேண்டியும் வந்திருக்கும். நயினாதீவை எண்ணிப் பார்ப்பவர்களுக்கும், அங்கிருந்து அதனை அனுபவிப்பவர்களுக்கும் இது புரியும். அதாவது, யுத்தம் சிங்களவரின் ஆக்கிரமிப்பு வேகத்தைத் தடுத்து நிறுத்தியது, கட்டுப்படுத்தியது.

ஆனால், யுத்தத்தின் மூலம் புலிகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு எவ்வளவோ தடையாக இருக்கின்றபோதிலும் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்தே தீருவது என்ற நிலைப்பாட்டில் இருந்து பௌத்த பேரினவாதிகளும், அரசாங்கமும் விலகி விடுவதாக இல்லை. பெரும் செலவீட்டிலும் ஆக்கிரமிப்புத் திட்டங்களை வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் ஊக்குவித்து வருகின்றது.

ஆனால், ஆக்கிரமிப்பாளரிடம் உள்ள ஒற்றுமையும், அவாவும், தமது தாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் தமிழரிடம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில், எமது தாயகத்தை ஆக்கிரமிப்பாளர்களிடம் காட்டிக் கொடுப்பதற்கென்றே பல துரோகக் கும்பல்கள் இன்று கொழும்பில் வாசம் செய்கின்றன. புலிகளுக்கு எதிரான போர் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள் தாம் காட்டிக் கொடுப்பது தமிழர் தாயகத்தை என்பதை மறந்துவிட்டார்கள். அவ்வாறு இல்லாது போனால் தற்பொழுது வவுனியாவில் தரித்துள்ள இக்குழுக்களின் கண்முன்னால் வவுனியா நகரில் நடைபெறும் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தியிருக்கலாமே.

இந்திய அதிகாரிகள் கூறினர். இப்பகுதியில் தொடர்ந்து மோதல் நடைபெறுகிறது.

யுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியானமை தெரிந்ததே.

## அமெ. போர் விமானங்கள் பொஸ்னியா வருகின்றன

(வாஷிங்டன்)

பொஸ்னியா பகுதியில்நிலை கொண்டுள்ள ஐ நா படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கா 40 போர் விமானங்களை அங்கு அனுப்புகின்றது. இவை சேர்பியர்களிடமிருந்து முஸ்லிம் பகுதிகளைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் 12 விமானங்கள் ஏற்கனவே ஜேர்மனியிலுள்ள தளத்திலிருந்து வந்து சேர்ந்துள்ளன. சி-130 ரக பாரிய சரக்கு விமானங்கள் உட்பட மேலும் 12 விமானங்கள் அமெரிக்காவிலிருந்து புறப்பட்டுள்ளன. ஆறு போர் விமானங்கள் இப்பகுதியில் தரித்துள்ள அமெரிக்கக் கடற்படையின் தியோடர் றூஸ்வெல்ட் எனும் விமானந் தாங்கிக்கப்பலில் இருந்து செயற்படவுள்ளன. இக்கப்பல் தற்போது மத்திய தரைக்கடற் பகுதியில் நிலைகொண்டுள்ளது.

## பயங்கரவாத பட்டியலில் பாகிஸ்தான் இடம்பெறாது

(வாஷிங்டன்)

பாகிஸ்தான் பயங்கரவாத நாடுகளின் பட்டியலில் சேர்க்கப்படமாட்டாது என அமெரிக்கா அறிவித்துள்ளது. காஷ்மீர், பஞ்சாப் தீவிர வாதிகளுக்கு பாகிஸ்தான் ஆதரவு வழங்கியதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியதையடுத்தே பாகிஸ்தான் பயங்கரவாத நாடுகளின் பட்டியலில் சேர்க்கப்படலாம் என கருதப்பட்டது. எனினும் தற்போது பாகிஸ்தானின் எதிர்கால நடவடிக்கைகள் கூர்ந்து கண்காணிக்கப்படும் என அமெரிக்க வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினார்.

தீவிரவாதிகளுக்கு உதவியதாகக் கூறப்படும் சில உளவுத்துறை அதிகாரிகளை பாகிஸ்தான் அகற்றியது இந்த முடிவுக்கு காரணம் எனக் கூறப்படுகின்றது. அமெரிக்காவின் பயங்கரவாத நாடுகள் என்ற பட்டியலில் ஈரான், ஈராக், கியூபா, லிபியா, வடகொரியா ஆகிய நாடுகள் உள்ளன.

போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட

## இருவருக்கு மரணதண்டனை சவூதியில் நிறைவேற்றம்

(டோகா)

சவூதி அரேபியாவுக்கு போதைப் பொருள்களை கடத்திச் சென்றதாக குற்றம் சாட்டப்பட்ட ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ஒருவருக்கும், பாகிஸ்தானைச் சேர்ந்த் ஒருவருக்கும் நேற்று முன்தினம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை தொழுகைக்குப் பின்னர் கழுத்தில் வெட்டப்பட்டு தலை துண்டிக்கப்பட்டு இவர்களது மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இவர்களது மரணதண்டனையை ரத்துச்செய்யும்படி சவூதிஅரேபிய நீதிமன்றத்தை ஐரோப்பிய பாராளுமன்ற அமைப்பு கேட்டுக் கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஜனவரி முதல் இத்தகையகுற்றங்களுக்காக சவூதி அரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டவர்களின் தொகை இவர்களுடன் சேர்த்து அறுபதாக உயர்ந்து விட்டது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையகம் நேற்றுமுன்தினம் புதுடில்லியில் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது, இந்த இடைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதேயன்றி ரத்துச்செய்யப்படவில்லை என்றும், எனவே ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும் என்றும், இந்த

காவிரிநீரைப் பெறுவதற்காக

## வாழப்பாடியின் முயற்சிக்கு வீரமணி வரவேற்பு

(சென்னை)

தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய காவிரிநீரை பெறுவதற்காக எதிர்வரும் புதன்கிழமையன்று தமிழ்நாடு, மற்றும் புதுச்சேரி மாநிலங்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்து வலியுறுத்த இருப்பதற்கு திராவிடக் கழகம் ஆதரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தி. க. பொதுச் செயலாளர் சி வீரமணி நேற்று முன்தினம் சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் மேலும், இவ்விடயத்தில் வாழப்பாடி இராமமூர்த்தி எடுக்கும் முயற்சிகளுக்கு வரவேற்பு தெரிவிப்பதாகவும், மற்றப்பிரச்கினைகளில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், காவிரிநதி நீர் பிரச்சனையில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலங்களைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருமித்த உணர்வுடன் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கலைப்பீட பரீட்சை

யாழ்.பல்கலைக்கழக[1991-92] கல்வியாண்டு கலைப்பீட மாணவர்களுக்கான முதலாம் ஆண்டுப் பரீட்சை எதிர்வரும் இரண்டாம் திகதிமுதல் ஆரம்பமாகவுள்ளது.

இரண்டாம் ஆண்டு பகுதி I மாணவர்களுக்கான பரீட்சை அடுத்த மாதம் 23 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கள் எதுவும் வெளியிடப்பட டுள்ளது.

## பூமியதிர்ச்சியில் இறந்த 16பேரின் சடலங்கள் மீட்பு

ஜப்பானில் அண்மையில் இடம்பெற்ற பூமிஅதிர்ச்சியில் கொல்லப்பட்ட 16பேரின் சடலங்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன. இவர்களுடன் இப் பூமியதிர்ச்சியில் 142பேர் கொல்லப்பட்டுள்ளனர் என இதுவரை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் பலர்காணாமல் போயுள்ளதாக ஏற்கனவே செய்திகள் வெளிவந்துள்ளன.

1968க்கு பின்னர் ஏற்பட்ட மிகமோசமான பூமியதிர்ச்சி இதுவென கூறப்படுகிறது. இப் பூமியதிர்ச்சியின் போது கொல்லப்பட்டோரின் சடலங்கள் மீட்கும் பணியில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பொலிசார் ஈடுபட்டுவருவதாக ஜப்பானிய அரசு அறிவித்துள்ளது.

## பாக். அதிபரும் பிரதமரும் விரைவில் பதவி விலகலாம்?

### ஆண்டிறுதிக்குள் பொதுத் தேர்தல்?

பாகிஸ்தானில் தேர்தல்கள் நடத்துவது தொடர்பாக பிரதமர் நவாப் ஷெரீபிற்கும், எதிர்க்கட்சிகளுக்கும் இடையே உடன்பாடு எட்டப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமாபாத்திலிருந்து வரும் தகவல்கள் மூலம் எதிர்க்கட்சிகளுக்கும் அரசுக்கும் இடையேசமரசம் ஏற்பட்டிருப்பதை அடுத்து இந்த ஆண்டின் பிற்பகுதியில் தேர்தல்கள் இடம்பெறலாம் எனவும் தெரியவருகிறது.

நடுநிலை அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுவது, பிரதமர் நவாப் ஷெரீபும்,அதிபர் குலாம் இஷாக்கானும் பதவி விலகுவது என்பன உட்பட பல விடயங்களில் எதிர்க்கட்சிகளுக்கும், அரசுக்குமிடையே இணக்கம் ஏற்பட்டிருப்பதாகவும் மேலும் தெரியவருகிறது. எதிர்க்கட்சித் தலைவி பெனாசிர் பூட்டோ, அதிபர் குலாம் இஷாக்கான், பிரதமர் நவாப் ஷெரிப், இராணுவத் தளபதி அகமட்கான் ஆகியோர் ஏற்றுக்கொண்ட ஒரு தீர்மானத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## ரஷ்ய தொழில் நுட்பம் இந்தியாவிற்கு கிடைக்காது

இந்தியாவிற்கு கிரியோஜெனிக் ராக்கட் என்ஜின்கள் மற்றும் அதனோடு இணைந்த தொழில்நுட்பம் என்பவற்றை விற்பது தொடர்பாக அமெரிக்காவும், ரஷ்யாவும் உடன்பாடு ஒன்றை எட்டியுள்ளன.

இந்த புதிய உடன்பாட்டின்படி ரஷ்யா இந்தியாவிற்கு ராக்கட் தொழில்நுட்பத்தை விற்காது எனினும் இந்தியாவின் விண்வெளி ஆய்வுத் தேவைகளுக்காக சில ராக்கட் என்ஜின்களை மட்டும் விற்கும் என்றும் மேலும் கூறப்பட்டுள்ளது.

# இளையவர் கைக்கு தி.மு.க. தலைமை கிட்டும்

## -நாஞ்சில் மனோகரன் கருத்து

(சென்னை)

அண்மையில் தி. மு. கவிலிருந்து வெளியேற்றப்பட்ட கட்சியின் முன்னாள் துணைப் பொதுச் செயலர் நாஞ்சில் மனோகரன் கட்சிக்கு எதிரான கருத்துக்களை வெளியிட ஆரம்பித்துள்ளதாக சென்னை செய்திகள் தெரிவிக்கின்றன.

தி.மு. கவிலுள்ள இளைய தலைமுறை தலைமைப் பொறுப்பை ஏற்கும் வகையில் மு கருணாநிதி பதவிலக வேண்டும்என நாஞ்சில் மனோகரன் கோரியுள்ளார். கருணாநிதி கட்சித்தலைவர் பதவியில் இருக்குவரை தாம் மீண்டும் தி மு கவில் சேரப்போவதில்லை என்றும் அவர் நேற்று செய்தியாளர்களிடையே பேசுகையில் தெரிவித்தார்.

இளைய தலைமுறை தி. மு க தலைமையைகைப்பற்றுவது தவிர்க்க முடியாதது அடுத்த மூன்று மாதத்திற்குள் தலைமை மாற்றம் நடைபெறத்தான் போகின்றது கட்சித் தலைமையிடம் நான் மன்னிப்புக் கேட்டு வெளியிட்ட அறிக்கை என்னை ஏமாற்றி கருணாநிதியால் பெறப்பட்ட ஒன்றாகும். கட்சியின் ஒற்றுமையைக்காக்க அந்த அறிக்கையில் கையெழுத்திடுமாறு நான் வற்புறுத்தப்பட்டேன் என்று நாஞ்சில் மனோகரன் தெரிவித்தார்.

கட்சியின் இளைய தலைமுறைக்கு ஓர் ஒளிமிகு எடுத்துக் காட்டாக வை. கோபாலசாமி திகழ்கிறார். உரிய காலகட்டத்தில் கோபாலசாமி தகுந்த ஒரு முடிவு எடுப்பார். தி. மு. கவின் பெரும்பாலான மாவட்டச் செயலர்கள் என்னையும் கோபாலசாமியையும் ஆதரிககின்றனர். நான் வேறு எந்த கட்சியிலும் சேரப்போவதில்லை என்றும் நாஞ்சில் மனோகரன் மேலும் தெரிவித்தார்.


## தேவை

**அச்சுக்கோர்ப்பாளர்**

(தமிழ், ஆங்கிலம்)

**இயந்திர இயக்குநர்**

(தன்னியக்க மற்றது)

மேற்படி பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

தகுதியானோர் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

**ஈழநாதம்**

31, மகேந்திரா வீதி,

யாழ்ப்பாணம். (இ)



யாழ் நகர் **ஸ்ரீதர்** திரையரங்கில்

(கரும்புலிகள் நினைவாக)

போராளிக் கலைஞர்கள் ஒருங்கிணைந்து

விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம்

தயாரித்து வழங்கும்

**"தாயகக் கனவு"**

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மணி,

மாலை 4.00 மணி, 6.00 மணி

[சி6959]



சுவிற்சர்லாந்தில் பழமை வாய்ந்த தங்கநிறக்

**கடிகாரங்களின்கண்காட்சி**

பழமை வாய்ந்த Wyler, Invicta, West End, Damas, Rolex போன்ற தங்கநிறக் கடிகாரங்கள் சுவிற்சர்லாந்தில் கண்காட்சிக்கு அனுப்புவதற்காக நியாயமான விலைக்கு எம்மால் வாங்கப்படும். [பழுதடைந்த நிலையிலுள்ள கடிகாரங்களானாலும் சரி].

டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ்,

284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7033)


### விடுவிக்கப்

அருளானந்தம் அற்புதராஜ் (வயது25, சுப்பர்மடம், பருத்தித்துறை) குழந்தைவேல் ஆறுமுகம் (வயது 43, ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை), விக்டர் வின்செட் வீபோல் (வயது 28, 19 முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்), இராசையா நேசராசா (வயது23, தாளையடி வடக்கு, தாளையடி), பிரான்சிஸ் சன்நிக்கலஸ் (வயது 28, இளவாலை, மாரீசன்கூடல் தற்போதயமுகவரி தாளையடி

---

சோமாலியாவில்

## ஐ.நா. படை நடத்தை இத்தாலி கண்டனம்

சோமாலியாவில் உள்ளூர் கிளர்ச்சித் தலைவர் மூகமட் ஐடீட் மீது ஐ நா அமைதிப் படை எடுக்கும் நடவடிக்கை குறித்து இத்தாலி ஐ.நாமீது கண்டனம் தெரிவித்துள்ளது

இதனை தொடர்ந்து ஐ நா அமைதிப்படையில் உள்ள இத்தாலிய தளபதியை ஐ நா திரும்பப்பெற்றுள்ளது. ஐ நாவின் பொதுமக்கள் எதிரான நடவடிக்கையை இந்த இத்தாலிய ஜெனரல் பகிரங்கமாக கண்டித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாலிய தளபதி உத்தரவிற்கு கீழ்படிய மறுத்ததாக அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இதனிடையே சோமாலியாவில் உள்ள தனது படைகளை வாபஸ் பெறப்போவதாக இத்தாலி மிரட்டியுள்ளது. சோமாலியா முன்பு இத்தாலியின் குடியேற்ற நாடாக இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### நிவாரண

குடாநாட்டில் கடந்தகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட நிவாரண வேலைகள் குறித்தும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய நிவாரண சேவைகள் குறித்தும் விரிவான பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டுவருவதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். குடாநாட்டில் சிறிலங்கா இராணுவத்தினரின் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் அகதி முகாம்களில் தங்கியுள்ளன. இவ்வாறு அகதி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் உதவித் திட்டத்தின்கீழ் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் செயற்திட்டம் குறித்தும் இக்குழுவினர் பேச்சுவார்த்தைகளை நடாத்திவருகின்றனர். சுமார் 70 8 மில்லியன் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மேற்படி நிவாரண சேவைத்திட்டம் குறித்து இடைக்கால அறிக்கை ஒன்றை மேற்படி அதிகாரிகள் குழுவினர் யாழ்ப்பாணத்தில் இருந்து எடுத்துச் சென்றுள்ளனர். இவ் அறிக்கையை ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் அதிகாரிகளிடம் சமர்ப்பித்து இத் திட்டத்தை பூரணப்படுத்துவதற்கான மேலதிக முயற்சியில் மேற்படி அதிகாரிகள் குழுவினர் ஈடுபடுவார்கள் என்று கூறப்படுகிறது.

ஏற்கனவே அகில உலக ஹெயர் ஸ்தாபனத்தின்கொழும்பு அலுவலக உயர் அதிகாரிகளுடனும் சர்வோதய அமைப்பின் தலைமையக உயர் அதிகாரிகளுடனும் சிறுவர் பாதுகாப்பு நிதிய கொழும்பு தலைமை அலுவலக உயர் அதிகாரிகளுடனும் மேற்படி அதிகாரிகள்குழு குடாநாட்டின் நிவாரண சேவைகள் குறித்து உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளனர்.

அத்துடன் அங்கலிக்கன் திருச்சபை ஆயர் ஹென்னத் பெர்னாண்டோவையும் இவ் அதிகாரிகள் குழுவினர் சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து விரிவானபேச்சுவார்த்தைகளை நடாத்தியதாக கொழும்பில் இருந்து இறுதியாகஎமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

### 7 தமிழர்

கட்டட கூலித்தொழில் செய்து வந்தனர்.

கடந்த புதன்கிழமை நள்

### இரு நாடுகள்

காவின் எஞ்சிய பகுதி ஐரோப்பாவில் வளம் மிக்க சுவிஸ்ஸர்லந்தின் அளவுக்கு சமமாக இருக்கும். ஆசியாவின் வளம் மிக்க சிங்கப்பூரை விட 75 மடங்கு பெரியதாக இருக்கும் என்பதைக் கவனிக்க வேண்டும். சிங்கள மக்கள் நாட்டின் அளவு குறித்துச் சிந்திப்பதிலும் விட போர் குறித்த ஆபத்தை நோக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ் மக்களை

மௌனம்பவைக்கப் பார்க்கின்றன.

இவ்வாறு தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளின் அவலநிலை குறித்து கருத்து வெளியிட்ட வெரித்தாஸ் வானொலி குறிப்பிட்டது.

போராளிகளுக்கு எதிராக மட்டுமல்ல இலங்கைத் தமிழருக்கு தமிழக மக்கள் அளித்த தார்மீக ஆதரவை சிதைக்க முயன்ற இப்பத்திரிகைகள் இப்பொழுது தமிழ் அகதிகளால் சட்டம் ஒழுங்கு சீர்குலைவதாக தெரிவிக்கின்றன. சினிமாவை உண்மை என நம்பும் தமிழக மக்கள் இதை ஏன்தான் நம்பமாட்டார்கள் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் போர் இல்லை என்று வெளிஉலகிற்கு காட்ட விரும்பும் சிங்கள அரசிற்கு துணைபோகும் நடவடிக்கையிலஇந்தியா இறங்கியுள்ளதா? இந்தியாவில் உள்ள வங்காள

---

## 5 பெண்கள் கைது

(வவுனியா)

வவுனியா ஊடாக நேற்று வடபகுதி வந்த பயணிகளில் ஐந்து பெண்களை தாண்டிக்குள தடைமுகாம் இராணுவத்தினர் கைது செய்துள்ளனர். தடைசெய்யப்பட்ட பொருள்களை இவர்கள் கொண்டுவந்துள்ளதாகக் கூறி இவர்களை இராணுவம் கைது செய்தது.

இப் பெண்கள் நொச்சிக்குளம்; அலைகல்லுபோட்ட இடம், கிளிநொச்சிபகுதிகளை சேர்ந்தவர்கள்.

இதே சமயம் நேற்று வடபகுதிக்கு வெளியே சென்ற பயணிகள் நொச்சிமோட்டை பாடசாலைக்கு எதிரேஉள்ள வயல்வெளியூடாகச் செல்ல இராணுவம் உத்தரவிட்டது, இப்பயணிகள் பின்னர் சிறிய பாலத்தடி காவலரணில் சோதிக்கப்பட்டு தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டனர்

### இன்று

அறிஞர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தமிழீழ நீதி. நிர்வாக துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### பொதுக் கூட்டம்

(தொல்புரம்)

சங்கானை வலிமேற்குப் பிரதேச வர்த்தக சங்கத்தின் பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 2 - 30 மணியளவில் வட்டு இந்துக் கல்லூரி மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. த. கோவிந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இப் பொதுக்கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் தொழிற்சங்கப் பொறுப்பாளர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளதால் அங்கத்தவர்கள் அனைவரும் குறித்த நேரத்தில் சமுகம் கொடுக்குமாறு சங்கச் செயலாளர் க. ஸ்ரீமுருகன் தெரிவித்துள்ளார். (41)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 17-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10398

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
26-0649, 24-6348, 24-4481, 28-3233, 27-5197, 26-4281, 22-3887, 24-1040, 27-9707, 26-0573, 42-3615, 24-5119, 26 4139, 26-8746, 41-1227.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்
28-1111, 24-4367, 26-3937, 22-6468, 26-6933, 41-7230, 42-9220, 41-9997, 41-4129, 27-0089, 22-5857, 42-1464, 26-3528, 26-0535, 42-6452, 26-7393, 42-1721, 28-1862, 26-3495, 41-9355, 43-0916, 26-2108, 26-2573, 26-1690.


பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

## அறிவித்தல்

நாம் திட்டமிடல் பணிப்பாளரின் பட்டியலின்படி நிவாரணப் பொருள்களை சரியாக விநியோகித்து வருகின்றோம். ஆனால் அதில் மிகுதியாகவரும் சொற்ப பணத்திற்கு பொருள்கள் விநியோகிக்கப்படமாட்டாது எனவும் பின்பு எல்லாத் தொகைக்கும் சேர்த்து உரியவர்களுக்கு பொருள்கள் வழங்கப்படும் என்பதை 24 - 04 - 1993 கிளை நிலையங்களில் விளம்பரப் பலகை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

பொதுமுகாமையாளர்

பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்.

(சி/7036)



புங்குடுதீவு - நயினாதீவு

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## அறிவித்தல்

டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ்,
284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-7033)

## வலதுகுறைந்த குழந்தைகள்

## பரிசோதனை நிலையம்

வலது குறைந்த குழந்தைகளின் நலன் கருதி யாழ். ஆஸ்பத்திரியில் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ. இ.) உதவியுடன் சிகிச்சை நிலையம் இயங்கி வருகின்றது. இந் நிலையத்தில் குழந்தைகளின் உடல், உள, வளர்ச்சி, இசைவாக்கம், கட்புலன், செவிப்புலன் என்பன சோதிக்கப்படுகின்றன. இவ்வாறான பிரச்சினைகள் உள்ள குழந்தைகளின் பெற்றோர், இந் நிலையத்தின் சேவைகளை பெற்றுக்கொள்ளும்படி ஆலோசனை கூறப்படுகின்றனர். இவ்வாறான சிறுவர்களை யாழ். வெளிநோயாளர் பகுதி 14ஆம் அறையிலுள்ள வைத்தியரிடம் கூட்டிச்செல்லுமாறு அறிவுறுத்தப்படுகின்றார்கள். பெற்றோரை மேற்கூறிய குறைபாடுகள் உள்ள குழந்தைகளை மட்டும் இந் நிலையத்துக்கு கொண்டுவரும்படி கூறப்படுகின்றது.

தகவல்:
(5405) சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ. இ.)

## தேவை

அறிவியல். விஞ்ஞான
தமிழாக்க விடயங்களையும்,
வீடியோ திரைப்படத்
தமிழாக்க விடயங்களையும்
ஒப்பிட்டு சரிபார்க்கக்கூடியவர்கள் தேவை

**பல்கலைக்கழக, பாடசாலை கல்வி முடித்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.**

**விளம்பர இல. 195,**
மே/பா ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். (சி/7025)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ராசா (வயது23, தாளையடி வடக்கு, தாளையடி), பிரான்சிஸ் சன்நிக்கலஸ் (வயது 28, இளவாலை, மாரீசன்கூடல் தற்போதயமுகவரி தாளையடி அகதிமுகாம்), பிரான்சிஸ் பின்ளை கிறிஸ்தோபர் (வயது 27, சீனிப்பந்தல், இளவாலை. தற்காலிக முகவரி அந்தோனியார் கோவில் முகாம், மானிப்பாய்) ஆகியோரே நேற்று வடபகுதிக்குள் வந்து சேர்ந்தவர்களாவர்.

7 தமிழர்

கட்டட கூலித்தொழில் செய்து வந்தனர்.

கடந்த புதன்கிழமை நள்ளிரவு சினிமாபார்த்து விட்டு வீடுதிரும்பிக் கொண்டிருந்த இவர்களை இராணுவத்தினரா அலலது பொலிஸ் அதிரடிப் படையினரா கைது செய்தனர் என்பது குறித்து அறிய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என தெரிய வருகிறது.

இலங்கையில் போர் இல்லை என்று வெளிஉலகிற்கு காட்ட விரும்பும் சிங்கள அரசிற்கு துணைபோகும் நடவடிக்கையில்இந்தியாஇறங்கியுள்ளதா? இந்தியாவில் உள்ள வங்காள அகதிகள் தற்போதும் திருப்பி அனுப்பப்படாமல் உள்ள போது போர் நடக்கும் இடத்திற்கு தமிழ் அகதிகளை அனுப்பும் இந்தியாவின் நோககம் என்ன? என்றும் அதில் மேலும் வினா எழுப்பப் பட்டது.

## காரைநகர் பலநோக்குகூட்டுறவுச் சங்கம்

[வரைவுள்ளது]
374, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

# முக்கிய அறிவித்தல்

## கிளைக் குழுத் தேர்தல் - 1993

மேற்படி சங்கத்தின் கிளைக் குழுத் தெரிவுக்கான நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளும் திகதி 01-08-93 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9.00 — மு. ப. 10.00 மணி வரை அபேட்சகர்கள் நியமனங்களில் ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் அன்றைய தினம் மு. ப. 10.00 மணி முதல் 11.00 மணிவரை தேர்தல் உத்தியோகத்தரால் எழுத்துமூலமான ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தல் திகதி 08-08-93 ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.00-பி. ப. 4.00 மணி வரை நடைபெறும் பின்வரும் கிளைகளுக்கான நியமனப் பத்திரங்கள் பின்வரும் இடங்களில் ஏற்றுக்கொள்ளப்படும்.

| கிளை இல | கிளையின் பெயர் | ஏற்றுக்கொள்ளப்படும் இடம் |
|---|---|---|
| 1 | தோப்பகம் | சித்தங்கேணி பிள்ளையார்கோவிலுக்கு அருகாமை |
| 2 | விளானை | வழக்கம்பரை - சுளிபுரம் |
| 5 | காரைநகர் | ,, ,, |
| 6 | ஆலடி | ,, ,, |
| 9 | வியாவில் | ,, ,, |
| 11 | பாலாவோடை | ,, ,, |
| 12 | வாரிவளவு | ,, ,, |
| 13 | நீலிப்பந்தனை | ,, ,, |
| 3 | களபூமி | பண்ணாகம், சுளிபுரம் |
| 4 | கணேஷன் | ,, ,, |
| 8 | கோவளம் | ,, ,, |
| 7 | சிவகாமி | தொல்புரம் சந்தைக்கு அருகாமை |
| 10 | ஊரி | சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை |

கூட்டுறவு அலுவலகம்
யாழ்ப்பாணம் (சி-7034)
17-07-93

திருமதி யோ. செல்வரத்தினம்
தேர்தல் உத்தியோகத்தர்

புங்குடுதீவு - நயினாதீவு
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## அறிவித்தல்

புங்குடுதீவு-நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளும், காரியாலயமும் நாளை 19-7-93 ஆம் திகதி திங்கட்கிழமை ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு மூடப்பட்டிருக்கும். அதற்குப் பதிலாக இன்று [18-07-93] ஞாயிற்றுக்கிழமை முழு நாளும் திறக்கப் பட்டிருக்கும் என்பதை சகல நுகர்ச்சிப் பாவனையாளருக்கும், சங்க ஊழியர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ப. நோ. கூ. சங்கம்,
புங்குடுதீவு-நயினாதீவு,
(சி/7035)

செ. எ. செல்வவதனா
பதில் பொது முகாமையாளர்

# கண்ணீர் அஞ்சலி



## லெப்டினனட் புனிதன்

(கனகசபை செங்குட்டுவன்)
(அம்பிளா பாலாவோடை காரைநகர்)

புனிதன்!
இப் புனிதப் போரில்
உன் தியாகம்
பெரிது.
பூதான்-
உதிரும்
ஆனால்-
மொட்டான நிலையிலேயே
உன்னை
நீ
தியாகம் செய்திருக்கிறாய்!

(5410) காரைநகர் வாழ் மக்கள்